செய்தி வெளியீடு எண்: 300 நாள்: 04.05.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களிடம் இன்று (4.5.2018) தலைமைச் செயலகத்தில், மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற தேசிய அளவிலான கலா உத்சவ்–2017 போட்டிகளில், இசைப்பிரிவில் இரண்டாம் பரிசு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 மாணவ, மாணவியர்கள், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் வழங்கப்பட்ட வெள்ளிக் கோப்பை, வெள்ளிப் பதக்கம், ரூ.75,000/– ரொக்கப் பரிசு ஆகியவற்றை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். இம்மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பாக நினைவுக் கேடயம் மற்றும் தலா ரூ.5000/–க்கான காசோலைகள் ஆகியவற்றை வழங்கினார்கள்.

இந்திய நாட்டின் பாரம்பரிய கலை இனங்களை மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்து அக்கலை இனங்களில் மாணவர்தம் திறன் மேம்பட வழிவகுக்கவும், அழிந்து வரும் கலை இனங்களை மீட்டெடுத்து புத்துயிர் ஊட்டி வளர்க்கவும் கலா உத்சவ் திட்டம் வழிவகுக்கிறது.

கலா உத்சவ்–2017 போட்டிகள் “ஒரே பாரதம் உயர்வான பாரதம்” எனும் மையக் கருத்தினை முன்னிலைப்படுத்தி நடத்தப்பட்டது. இப்போட்டிக்காக கடந்த ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெற்ற நடனம், இசை, நாடகம் மற்றும் காண்கலை போட்டிகளில், தமிழ்நாடு முழுவதும் 9 முதல் 12–ஆம் வகுப்புகள் வரை பயிலும் 6477 மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு அணியிலும் ஒரு மாற்றுத்திறனாளியும் கலந்து கொண்டனர். மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று தேசிய அளவிலான போட்டிகளுக்கு நடனம், இசை, நாடகம் மற்றும் காண்கலை பிரிவுகளில் 30 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

2017–ஆம் ஆண்டிற்கான கலா உத்சவ் போட்டிகள் மத்திய பிரதேச மாநிலம், போபாலில் உள்ள மண்டல கல்வியியல் நிறுவனத்தில் 3.1.2018 முதல் 6.1.2018 வரை நடைபெற்றது. இந்த தேசிய அளவிலான போட்டிகளில் 34 மாநிலங்களிலுள்ள பள்ளிகள்,

மத்திய அரசின் பள்ளிகள் மற்றும் நவோதயா பள்ளிகளில் இருந்து மொத்தம் 144 அணிகள் பங்கேற்றன. இப்போட்டியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர். அருணா, ஆர். அகிலா, பி. முத்துக்குமார், என். விஷ்ணுவரதன், எஸ். பாலசந்தர், கே. பாலகுமார், பி. பாரதி, எம். குகன் ஆகிய 8 மாணவ, மாணவியர்கள் இசைப்பிரிவில் இரண்டாம் பரிசு பெற்றதற்காக, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் வழங்கப்பட்ட வெள்ளிக் கோப்பை, வெள்ளிப் பதக்கம், ரூ.75,000/– ரொக்கப் பரிசு ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களிடம் இன்று காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

வெற்றி பெற்ற இம்மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று, தமிழ்நாடு அரசின் சார்பாக நினைவுக் கேடயம் மற்றும் தலா ரூ.5000/–க்கான காசோலைகள் ஆகியவற்றை வழங்கி, பாராட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ஆர்.இளங்கோவன், அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்ட இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 4.5.2018